[*2019 ஜனவரி 7*

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பொங்கல் காலம், தமிழர்களுடைய திருநாள். தமிழ்நாட்டில் இருக்கிற தாய்மார்களெல்லாம் பொங்கல் வருகிறபோது, தங்களுடைய தாய் வீட்டிலேயிருந்து வருகிற சீதனத்திற்காக தங்களுடைய இதயத்தையே கோலமாக்கி வீட்டின் முன்பாகப் போட்டு, விழிகள் இரண்டையும் வாசலிலே வைத்து தன்னுடைய அண்ணன் சீர் கொண்டு வருவான் என்று காத்திருப்பார்கள். அதுபோல, தமிழர்களுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற, ஒவ்வொரு தமிழரும் 'அம்மா' என்று அன்போடு அழைத்த நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெயர் சொல்கிற இந்த அரசு, பொங்கல் சீராக ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை உள்ளிட்ட கரும்போடு ஒரு பையைத் தந்து, அதோடு 1,000/– ரூபாயையும் சீராகத் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) அதை அன்புச் சகோதரர் எடுத்து வருவதுபோல, நம்முடைய அன்பு அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் எடுத்துத் தந்திருக்கிறார்கள். இது தாய்வீட்டுச் சீதனம். எனவே, என்றைக்கு அண்ணன் அந்த வீடுகளுக்கு பொங்கல் பையைத் தருகிறாரோ அப்பொழுதே பொங்கல் துவங்கிவிடுகிறது. எனவே, தமிழர்களுடைய இதயங்கள் நிறைந்திருக்கிற, பொங்கி வழிகிற, கரும்பை விட இனிப்பானது இந்த நேரம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2019 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 35 முதல் 39 வரையிலான 5 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு பொங்குகிற இதயத்தோடு சமர்ப்பிக்கிறேன்.